முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 15/2016

வாதி தரப்பு சாட்சி - 1 சண்முகம் திரு.ஆர்.ஞானசேகர் பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 12.08.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகம் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | சாமியாபிள்ளை | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 66 |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது வழக்குரையில் 1ம் அயிட்ட சொத்தின் சர்வே எண்.721/9 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது தான் சரி. 1ம் அயிட்ட சொத்திற்கு தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.12 ல் சர்வே எண் 712 /9 என உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.712/9 ற்கும், 1ம் அயிட்ட சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.721/9 தான் 1ம் அயிட்ட சொத்து. சர்வே எண்.712/9 யை தாவாவில் காட்டவில்லை. வா.சா.ஆ-12 மற்றும் வா.சா.ஆ.13 ஆகிய பட்டாட்டாக்கள் இதற்கு முன்பு யார் பெயரில் இருந்தது என்றால் முத்து சாமி மற்றும் பெரியசாமி பண்டாரம் பெயரில் இருந்து. நான் எந்த வருடம் தாவா சொத்து வாங்கினேன் என்றால் நியாபகம் இல்லை. தாவா சொத்துக்களிலிருந்து தான் முத்துசாமி மற்றும் பெரியசாமி பண்டாரம் ஆகியோர் இறந்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. பெரியசாமி பண்டாரம் எந்த வருடம் இறந்தார் என்றால் அது பற்றி தெரியாது. அவர் இறந்தது 18.09.2012 என்றால் அது பற்றி நியாபகம்இல்லை.

2. பெரியசாமி பண்டாரம் 2012ம் வருடம் தான் இறந்தார் என்றும், அதுவரை அவர் தாவா சொத்தில் தான் குடியிருந்தா என்றும், அதை மறைப்பதற்காக அவர் இறந்தது நியாபகம் இல்லை என நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 ல் பழைய புல எண் போடவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு அளந்து பார்த்து வாங்கினேனா என்றால் இல்லை. நான் கிரையம் பெறுவதற்கு முன்பு வில்லங்கம், வழக்கறிஞரிடம் கருத்துரை கேட்டேனா என்றால்

இல்லை. நான் கிரையம் பெறுவதற்கு முன்பு இடத்தை பார்வையிட்டேனா என்றால் பார்த்தேன் ஆனால் அளந்து பார்க்கவில்லை. நான் கிரையம் பெற்ற சமயத்தில் 2ம் அயிட்ட சொத்தில் மின் இணைப்பு, வீட்டு வரி ஆகியவை இருந்ததா என்றால் அதை பார்க்கவில்லை.

3. நான் கிரையம் பெற்ற சமயத்தில் 2ம் அயிட்ட சொத்தில் மின் இணைப்பு, வீட்டு வரி இரசீது இருந்தது என்றால் நியாபகம் இல்லை. 2016 வருடம் வரை வீட்டு வரி இரசீது, மின் இணைப்பு இரசீது ஆகியவை பெரியசாமி பண்டாராம் பெயரில் இருந்தது என்றால் அது பற்றி தெரியாது. 1 மற்றும் 2 ம் அயிட்ட சொத்துக்களுக்கு மின் கட்டண இரசீது நான் தாக்கல் செய்யவில்லை என்றால் 1ம் அயிட்ட சொத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். 2ம் அயிட்ட சொத்திற்கு இல்லை. 1ம் அயிட்ட சொத்தை ஒட்டி 2ம் அயிட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். 2ம் அயிட்ட சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்னர் யார் பெயரில் உள்ளது என்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். சுந்தரநாதன் பெயரில் இருந்தது. எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் வட்டாட்சியர் அலுவலகத்தில் பார்த்து தெரிந்து கொண்டேன்.

4. வில்லங்க சான்றிதழ் பார்த்தேனா என்றால் நியாபகம் இல்லை. வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நியாபகம் இல்லை. வா.சா.ஆ. 7 ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ-7 ஆவணத்தை பற்றி வழக்கறிஞருக்கு விவரம் சொன்னது யார் என்றால் நான் தான் சொன்னேன். எனது வழக்குரையில் காளியம்மாள், தங்கம்மாள், பெரியசாமி பண்டாரத்தின் மற்றொரு மகள் ஆகியோருக்கு பங்கு இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் நியாபகம் இல்லை. 15.02.2013 ம் தேதியிட்ட கிரையம் பத்திரம் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்பதை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் மேற்படி கிரையம் எப்போது வாங்கினார்கள் என தெரியாது. வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்களை நான் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பெரியசாமி பண்டாரத்திற்கு எத்தனை பெண் மக்கள் என்றால் 2 பெண்கள்.

5. முத்துசாமி பண்டாரத்தின் மகள்களுக்கு தாவா சொத்தில் பங்கு உள்ளதா என்றால் 1ம் அயிட்ட சொத்தில் தான் பாகம் உள்ளது. 2ம் அயிட்ட சொத்தில் கிடையாது. முத்து சாமி பண்டாரத்திற்கு மூன்று பெண்களா என்றால் ஒரு பெண் தெரிகிறது. மற்றவர்கள் தெரியவில்லை. 1ம அயிட்ட சொத்தை பெரியசாமி மகளோ, பெரியசாமி பண்டாரத்தின் மகளாகிய காளியம்மாள், தங்கம்மாள் ஆகியோர் எழுதி கொடுக்கவில்லை என்றால் அவர்கள் கையெழுத்து போட்டுள்ளார்கள். 1ம் அயிட்ட சொத்தில் முத்துசாமி

பண்டாரத்தின் வாரிசுகள் கையெழுத்து போட்டுள்ளார்களா என்றால் மருதம்மாள் கையெழுத்து போட்டுள்ளார். முத்துசாமி பண்டாரோ, முத்துசாமி பண்டாரத்தின் வாரிசுகளோ, பெரியசாமி பண்டாமோ, பெரியசாமி பண்டாரத்தின் வாரிசுகளோ வா.சா.ஆ-1 ஆவணத்தை எழுதி தரவில்லை என்றால் சரியல்ல. 1ம் அயிட்ட சொத்தின் அசல் கிரைய ஆவணம் எங்கே என்றால் வங்கியில் உள்ளது.

6. வங்கியில் உள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்ய இயலுமா என்றால் கேட்டு பார்க்கிறேன். வங்கியில் எந்த வருடம் வைத்தேன் என்றால் நியாபகம் இல்லை. முத்து சாமி பண்டாராமோ, பெரியசாமி பண்டாராமோ, அவர்கள் வாரிசுகளோ எழுதி கொடுக்காததால் தான் பெரியசாமி, முத்துசாமி இறந்த பின்னிட்டு பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முத்து சாமி மற்றும் பெரியசாமி எங்கு குடியிருந்தார்கள் என்றால் தாவா சொத்தில் இல்லை. எங்கு இருந்தார்கள் என்று தெரியாது. 2ம் அயிட்ட சொத்தில் யார் இருந்தார்கள் என்றால் சுந்தரநாதனை தான் கேட்க வேண்டும். பெரியசாமி பண்டாரம் தாவா சொத்துக்களை பொறுத்து உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

7. நாகப்பபிள்ளை மகன் தான் சுந்தரநாதன் என்றால் சரிதான். நாகப்பபிள்ளைக்கு மற்றொரு மகன் ஆனந்த் இருக்கிறார் என்றால் அவர் இறந்துவிட்டார். எப்போது இறந்தார் என்றால் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் பதிலுரையில் சுந்தரநாதன் மோசடியாக ஆவணங்களை தயார் செய்து கொண்டார் என்றும், அதற்கு காரணம் சம்பூரணம் ஆனந்த் (எ) ஆனந்த் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது பற்றி தெரியாது. எருதிகோன்பட்டிக்கும், தாவா சொத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 4 கீ.மீ இருக்கும். வழக்குரையில் மின் இணைப்பு எண்ணை பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் ஆனந்த், சுந்தரநாதன் ஆகியோர் இறந்த பின்னிட்டு தான் இவ்வழக்கை நடத்த வேண்டும் என்பதால் தான் இவ்வழக்கை தள்ளுபடிக்கு விட்டுவிட்டு மீண்டும் நடத்துகிறேன் என்றால் சரியல்ல.

**வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
Kulithalai.